21.03.2025

அ.வ.எண். 102/2022

வாசா.1 - ஆறுமுகம்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் குடியிருப்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் வாதிகள் மூவருக்கும் சேர்ந்து தான் சாட்சியம் அளிப்பதாக சொல்லி உள்ளேன். அவ்வாறு என் முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. நான் ஏற்கனவே குறுக்குவிசாரணையில் தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்று சொல்லியுள்ளேன், ஆனால் வாக்குமூலத்திலும், வழக்கிலும் கிழக்கு பகுதியில் பிரதிவாதியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் தவறாக சொல்லியுள்ளேன்.

நான் இந்த வழக்கை என்னுடைய சொத்தை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதை கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சொத்தை பிரதிவாதி நிறுவனம் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று எனது வழக்குரையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். வழக்கு சொத்து எங்கள் மூவருக்கும் பாத்தியம் என்பதை காட்ட நான் கிரய பத்திரங்களோ, வருவாய் துறை ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் என் தகப்பனார் பெயரில் உள்ள பத்திரங்களை நான் கொடுத்துள்ளேன். என்னுடைய அனுபவத்தில் தான் வழக்கு சொத்து உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது மானாவாரி பூமி. ஆனால் அடங்கல் தாக்கல் செய்யவில்லை. தற்போது வரை எங்கள் மூவருக்கும் வழக்கு சொத்து பிரிவுபடாத சொத்து என்றால் ஆமாம்.

என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், மற்றும் அவரது வாரிசு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது வாக்குமூலத்திலும், எனது வழக்குரையிலும் 70 சென்ட் விற்பனை செய்தது போக மீதமுள்ள சொத்து என்று சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தின் வழித்தடமானது மெயின்ரோட்டில் இருந்து எங்கள் சொத்திற்கு வடபுறமாக உள்ளது. அதன் வழியாகத்தான் பிரதிவாதியின் சொத்திற்கும் செல்லமுடியும் என்றால் ஆமாம். 22.10.1980 ல் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தான் என் தகப்பனாருக்கும், அவரது உடன் பிறந்தவர்களுக்கும், என்னுடைய தாத்தாவிற்கும் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

அதில் என் தகப்பனாருக்கு B-SCHEDULE சொத்தும், என் சித்தப்பாவிற்கு C-SCHEDULE சொத்தும் என் தாத்தாவிற்கு A-SCHEDULE சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த C-SCHEDULE சொத்தை தான் பிரதிவாதியின் முந்தைய விற்பனையாளர் என்ற முறையில் பிரதிவாதி வாங்கினார் என்றால் ஆமாம். எங்களுடைய பாட்டனாருக்கு ஒதுக்கப்பட்ட A-SCHEDULE சொத்தை பின்னிட்டு சரிசமமாக பிரித்து கொள்ள சொல்லி தான் பாகப்பிரிவினையில் உள்ளது என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு அந்த A-SCHEDULE சொத்தை பொறுத்து நாங்களும் எங்களது சித்தப்பாவும் பதிவு பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை, ஆனால்பாதியாக பிரித்து அனுபவம் செய்து வந்தோம். அந்த A-SCHEDULE சொத்து 1.50 ஏக்கர் இருக்கும். B-SCHEDULE சொத்தாக என் தகப்பனாருக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் 1.50 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. என் சித்தப்பாவிற்கும் 1.50 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. அதில் உள்ள காலை எண்கள் என்ன என்றால் 272/2 ஆகும்.

என்னுயை வழக்குரையில் அந்த காலையின் தற்போதையை உட்பிரிவு எண் சொல்லியுள்ளோன என்றால் இல்லை. 1980 பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் அது என் சித்தப்பாவிடம் தான் இருந்தது. இந்த அசல் ஆவணம் எங்கள் வசம் தான் உள்ளது, அதை மறைத்து நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு என்னுடைய சித்தப்பா 1986 ல் விற்பனை செய்யும்போது மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் நகலை தான் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் வழக்கு சொத்தில் வசிக்கவில்லை. 1980 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு எங்களது சொத்தானது உட்பிரிவானதா என்றால் இல்லை, என் சித்தப்பா விற்பனை செய்த பின்னிட்டு அவர்கள் உட்பிரிவு செய்துவிட்டார்கள். என் பாட்டனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்னுடைய வழக்குரையில் 2ம் அயிட்டமாக 1 ஏக்கர் காட்டியுள்ளேன். மேற்படி அந்த ஒரு ஏக்கரில் நாங்களும், என் சித்தப்பாவும் வடபுறமும், தென்புறமுமாக வாய்மொழியாக பிரித்து கொண்டோம். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்து பார்க்கவில்லை. என்னுடைய தாத்தா பெயர் சின்னிய கவுண்டர், என் தகப்பனார் பெயர் சின்னையன்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் A-SCHEDULE சின்னிய கவுண்டருக்கும், B-SCHEDULE சின்னியக் கவுண்டருக்கும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட C-SCHEDULE சொத்தில் தான் பிரதிவாதி நிறுவனம் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் 30 சென்ட் கிரயம் பெற்றுள்ளார்கள். 277/2 காலையானது எங்களது தாத்தாவை தவிர வேறு 3ம் நபர்களுக்கும் பாத்தியம் உள்ளது. அது யார் என்று எனக்கு தெரியவில்லை.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/ஆறுமுகம்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur